**OS.NO. 28/2021 and 31/2021 PW-1**

நாள் : 15.04.2025

பெயர் : பிரிஸ்ஸில்லா பிரீத்தி

க/பெ : பிரவீன்குமார்

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நீங்கள் கிறிஸ்துவ மதத்திடில் ஆர்சி வகுப்பை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். உங்கள் தாயார் பெயர் என்ன என்றால் புளோரா அவரும் கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவர் என்றால் ஆமாம். இறந்து போன இருதயராஜ் மற்றும் அவருடைய மனைவி மங்கயைர்கரசியும் கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவர்கள் தான் என்றால் ஆமாம். இறந்துபோன இருதயராஜ் என்பவருக்கும் அவருடைய மனைவி மங்கையர்கரசிக்கும் 45 ஆண்டுகளுக்கு முன்பாக திருமணம் நடைபெற்று அதன் மூலம் அவர்களுக்கு 3 பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் ஆமாம். அந்த மூன்று பெண் குழந்தைகள் இந்த வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் ஆமாம். இருதயராஜ்க்கும் மங்கையர்கரசிக்கும் விழுப்புரம் மாவட்டம் வேளந்தாங்கல் விண்ணரசி தேவாலயத்தில் கிறிஸ்துவ முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றால் ஆமாம்.

வேளந்தாங்கலில் மங்கையர்கரசி வசித்து வந்த போது இருதயராஜ் இராணிப்பேட்டை பெல் கம்பெனியில் வேலை செய்து வந்தார் என்றால் ஆமாம். உங்கள் அம்மா புளோரா இருதயராஜ் இராணிப்பேட்டையில் வசித்து வந்த சமயம் வீட்டில் சமைப்பதற்காக வேலைக்கு அமர்த்தப்பட்டார் என்றால் அது தவறு. இருதயராஜ் மற்றும் மங்கையர்கரசி திருமணம் பந்தம் இருந்த சமயத்திலேயே உங்கள் அம்மா புளோராவை உங்கள் அப்பா இருதயராஜ் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றால் ஆமாம். முதல்

திருமணம் நிலுவையில் இருந்த சமயத்தில் உங்கள் அப்பா இருதயராஜ் உங்கள் அம்மா புளோராவை இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார் எனவே அந்த திருமணம் சட்டத்திற்கு புறம்பானது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது ஆனால் என் அப்பா இருதயராஜ் என் அம்மா புளோராவை 1990 ல் திருமணம் செய்து கொண்டார்.

உங்கள் அப்பா இருதயராஜ் முதல் திருமணம் நிலுவையில் இருந்த போதே உங்கள் அம்மாவை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் நீங்கள் சட்டப்படியான வாரிசுகள் இல்லை என்று சொன்னால் அது தவறு. Indian succession Act ன் படி நீங்கள் அப்பா இருதயராஜ்– ன் வாரிசுகள் என்ற நிலைலைய கோரமுடியாது என்றால் அது தவறு. இந்த வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகள் தான் உங்கள் அப்பா இருதயராஜ் – ன் சட்டப்படியான வாரிசுகள் என்றால் இல்லை நாங்களும் வாரிசுதாரர்கள் தான். சொத்தை பெறும் நோக்கத்துடன் இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் அது சரியல்ல. எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 31/2021 ல் அவர்கள் கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் அது தவறு.

<u>5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் வாரிசுசான்று வேண்டி நான் கிராம நிர்வாக அலுவலரிடம் கோரியிருந்தேன் அவர் மறுத்தார் அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். உங்கள் அப்பா பெயர் இருதயராஜ் என்றால் ஆமாம். அவர் எப்போது காலமானர் என்றால் 2021 ல் காலமானார். இருதயராஜ்க்கு பெற்றோர்கள் உள்ளார்களா என்றால் இல்லை அவர்கள் காலமாகிவிட்டார். உங்கள் அப்பா இருதயராஜ்க்கு இரண்டு மனைவிகள் என்றால் ஆமாம் அவர்கள் பெயர் என்ன என்றால்

மங்கையர்கரசி மற்றும் புளோரா ஆவார்கள். உங்களை வாரிசுதார்களாக கோரிய மனுவில் வட்டாட்சியர் வாலாஜா அவர்கள் நீதிமன்றத்தை அனுகி உரிய பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு தான் உங்கள் மனுவை நிராகரித்தார் என்றால் ஆமாம். நீதிமன்ற முடிவின் படி வாரிசு சான்றிதழ் வழங்கப்படும் என்று சொல்லி மனுவை வட்டாட்சியர் நிராகரித்துள்ளார் என்றால் ஆமாம். உங்கள் தகப்பனார் இருதயராஜ்க்கு இரண்டு மனைவிகள் என்பதால் நீங்கள் தாக்கல் செய்த அசல் வழக்கு 28/2021 தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by NAVEEN DURAIBABU
Date: 2025.04.16 17:45:43 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.